மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே தாட்கோ மூலமாக வீடு கட்டு கின்ற திட்டத்தில் ரூ.4,000 என்று இருந்தது. அதைத் தற்போது தான், 1984-ல்தான் ரூ. 6,000 ஆக உயர்த்தியிருக்கிறோம். நான் கூட மானியக் கோரிக்கையிலே சொல்லும்போது, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கூறிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, வருகின்ற நிதிநிலைக்கேற்ப, ரூ. 10,000-லே கட்டுகின்ற திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப் பிட்டேன். அந்தத் திட்டம் வருகின்றபொழுது, சிறப் பாக அந்தக் குடியிருப்பைப் கட்டிக் கொடுக்க முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பின்தங்கிய மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி மையங்கள்.

603—(*வினா எண். 4932) மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியற் கல்லூரிகளில் அனுமதிக்காக நடைபெறும் நுழைவுத் தேர்வுக்கு பின்தங்கிய மாணவர்களுக்கு மாவட்ட வாரியாக பயிற்சி அளிக்க பயிற்சி நிலையங்கள் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அர சிடம் உள்ளதா ?

மாபுமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மாணவர் களுக்கு மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளில் அனுமதி பெற நடத்தப்படும் நுழைவுத் தேர்வுகளுக்குப் பயிற்சி யளிப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதன்படி சென்னை யில் உள்ள தனிப்பயிற்சி நிலையம், திருச்சி ஈ. வே. ரா. அரசு கலைக் கல்லூரி, கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரி, மதுரை மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரி ஆகிய நான்கு மையங் களில் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவர் களுக்கு நடப்பாண்டு முதல் நுழைவுத் தேர்வுப் பயிற்சியளிக்கப் படும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பிற்பட்ட மாணவர்களுக்கு நுழைவுத் தேர் வுக்கு வருகிற ஆண்டிலே யிருந்து பயிற்சி அளிக்கப்படும் என்ற விவரங்களை அறிவித்தார்கள். மாநிலம் முழுவதற்கும் நான்கே நான்கு மையங்களில்தான் அது தொடங்கப்பட இருப்பதாக

1986 ஏப்ரல் 28]

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆயிரக்கணக்கில் பிற்பட்ட மாணவர்கள் எழுதுகிறபொழுது, இதிலே சேர்க்கப்படுகிற மாணவர்கள் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கும். அந்த எண்ணிக்கை எவ்வளவு? கூடுதலாக பிற்பட்ட மாணவர்கள் பயன்படுகிற வகையில், குறைந்த பட்சம் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் அப்படிப்பட்ட பயிற்சி நிலையங்களை வருகிற ஆண்டிலே துவங்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மையத்திலும் தலா 100 பேர் வீதம் 400 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். ஜூன், ஜூலை மாதங்களில் மூன்று முதல் நான்கு வாரங்கள் வரை இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வரலாறு, நடப்புச் செயல்கள் நிலவியல் மற்றும் பொது அறிவியல் ஆகிய பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியில் சேர மாணவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 9,000க்குள் இருக்க வேண்டும். இது பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட இருக்கிறது. தேவையானால் அதிக எண்ணிக்கை மாணவர்களைச் சேர்ப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 400 மாணவர்களுக்கு என்றுதான் விவரங்களைச் சொன்னார்கள். எப்படியாவது வருகிற கல்வி ஆண்டில், நிச்சயமாக, அதைக் கூடுதலாக்க முயற்சி செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைத்து, அதே போல், இப்படிப் பயிற்சிக்குச் சேர்க்கப்படுகிற மாணவர்களுக்கு அரசு வேறு என்ன உதவிகளை, அவர்களுடைய உணவுக்காகவும், தங்கும் இடத்திற்காகவும்—ஏனென்றால், கிராமங்களிலேயிருந்து வருகிறவர்கள் நகரத்திலே தங்கித்தான் அந்தப் பயிற்சியைப் பெற வேண்டுமென்ற நிலை வரும்போது மிகப்பெரிய சிக்கல் ஏற்படும். ஆகவே, அவர்களுக்கு, உணவு, தங்குவதற்காக ஏதாவது உதவிகளை அரசாங்கம் செய்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியுள்ள மாணவர்களுக்குப் பயிற்சி மையத்தின் அருகிலுள்ள பிற்படுத்தப்பட்ட/சீர்மரபினர் மாணவர் இல்லத்தில் இலவச உணவு, உறையுள் அளிக்கப்படும். அந்தந்தக் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் தேவைப்பட்டால் பிற கல்லூரிப் பேராசிரியர்கள் ஒத்துழைப்புடன் பயிற்சி அளிக்கப்படும். அதிலே அதிகமான அளவுக்கு மாணவர்கள் வருவார்களானால், தேவைக்கேற்ப அடுத்த ஆண்டு நாம் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.